# காந்தியின் கனவு, மெய்ப்பட வேண்டும்!

கிரேக்கத்திலும், குடியரசு ரோமிலும் ஜனநாயகம் தோன்றியது என்பார்கள். இந்த இரண்டிற்கும் அடிப்படையானது தேர்தலாகும். பண்டைய தமிழகத்தில் குடவோலை மூலமாக தேர்தல் நடந்தது என்று உத்தரமேரூர் கல்வெட்டு தெரிவிக்கிறது. தேர்தலில் போட்டியிடும் மக்கள் பிரதிநிதிகளின் சொத்துகளையும் அவர்கள் குறித்த குறிப்புகளையும் தெரிவிக்க வேண்டும் என்று பாலாற்றின் கரையின் கல்வெட்டில் எழுதப்பட்டுள்ளது.

இன்றைக்கு தேர்தலின் நிலைமை என்ன? பணம் படைத்தவர்கள் தேர்தல் களத்தில் நிற்கலாம். தமிழகத்தின் 9 மாவட்டங்களைத் தவிர மற்ற மாவட்டங்களில் தற்போது நடந்து முடிந்த கிராம உள்ளாட்சித் தேர்தலில் குதிரை பேரங்கள், ஆள் கடத்தல் என்பதெல்லாம் சர்வ சாதாரணமாக நடந்தேறியது. கிராம உள்ளாட்சித் தேர்தலில் தங்களுடைய பகுதியில் தங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள அதிகாரம் பெற்ற அமைப்பு நிர்வாகிகளைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்ற நேர்மையான எண்ணம் காணப்பட்டதா என்பது சந்தேகம்தான்.

27 மாவட்டங்களில் நடந்த இரண்டு கட்ட உள்ளாட்சித் தேர்தலில், மாவட்ட ஊராட்சியில் 515 வார்டுகளும், ஊராட்சி ஒன்றிய 5,090 வார்டுகளும், கிராமப் பஞ்சாயத்துத் தலைவர்கள் 9,624 மற்றும் கிராமப் பஞ்சாயத்தில் 76,746 வார்டுகளுக்கும், 49,688 வாக்குச்சாவடிகளில் 2,58,70,941 மக்கள் வாக்களித்தனர். இது ஒரு மாபெரும் ஜனநாயகத் தேர்தல் திருவிழாதான். மறுக்க முடியாத ஒன்று.

பஞ்சாயத்து ராஜ் சட்டம் அரசியலமைப்புச் சட்டத்தில் 73-ஆவது திருத்தமாக 1992- இல் கொண்டு வரப்பட்டது. இதன்படி கிராம ஊராட்சிகளுக்கு உச்சபட்ச அதிகாரங்கள் தங்களுடைய தேவைகளுக்கேற்ப பொருளாதார வரைவுகள், கிராமம் தொடர்பான 29 செயல்வடிவத் திட்டங்கள் 11-ஆவது அட்டவணையில் சேர்க்கப்பட்ட பிறகு இந்திய நிர்வாக அமைப்பில் கிராம சபை முக்கியத்துவம் பெற்றது.

ஆங்கிலேயர்கள் ஆண்ட காலத்திலேயே உத்தமர் காந்தியால் பஞ்சாயத்து ராஜ் - கிராம ராஜ்யம் என்று வலியுறுத்தப்பட்டது. உள்ளாட்சி அமைப்புகள் 1870- க்குப் பிறகு ரிப்பன் பிரபுவின் ஆய்வால் செயல்வடிவம் பெற்றது. அதன் பின், ராயல் கமிஷன், மான்டேக்-செம்ஸ்போர்டு சீர்திருத்தங்கள் எனப் படிப்படியாக வளர்ந்ததுதான் உள்ளாட்சி நிர்வாகம். இந்தியா சுதந்திரம் பெற்ற பிறகு, பஞ்சாயத்து ராஜ் முறையை நடைமுறைப்படுத்த பல்வந்த்ராய் மேத்தா தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டு ஆய்வு நடத்தப்பட்டது. இந்தக் குழு தனது அறிக்கையை 1957- இல் சமர்ப்பித்தது.

மாவட்ட ஒன்றிய கிராம அளவில் மூன்று அடுக்கு முறைகளாக ஊரகப் பஞ்சாயத்துகள் அமைக்கப்பட வேண்டும் என்று இந்தக் குழு பரிந்துரைத்தது. மத்திய அரசின் மூலம் வரும் உதவிகளை மாநில அரசின் பரிந்துரையின்படி எப்படி நடைமுறைத் திட்டங்களுக்கு ஊராட்சிகள்

பயன்படுத்துவது, மைய ஆதரவுக் குழுக்களுடைய மூல ஆதாரங்களை எப்படிக் கையாள்வது என்பதெல்லாம் அதில் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

கிராமப் பஞ்சாயத்துகள் சீராகச் செயல்பட வேண்டுமென்று அசோக் மேத்தா, மோகன் தாரியா, அச்சுதபட்டவர்தன் போன்றவர்கள் எல்லாம் முன்முயற்சி எடுத்தார்கள். ஆச்சார்யா வினோபாவே எடுத்த பூமிதான இயக்கமும் இந்த நோக்கத்திலேதான் இருந்தது.

இ ந்தச் சிந்தனையில்தான், டாக்டர் டி.எஸ். சௌந்தரம் (டி.வி.எஸ். அதிபர் சுந்தரம் ஐயங்காரின் புதல்வி), டாக்டர். ஜி.ராமச்சந்திரன் இணையரின் முயற்சியால் காந்தி கிராம பல்கலைக்கழகம் தொடங்கப்பட்டது. வைதீக குடும்பத்தைச் சேர்ந்த சௌந்தரம்மாள் அப்போதே ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த ராமச்சந்திரனை திருமணம் செய்தது மிகப் பெரிய சமுதாயப் புரட்சி. மகாத்மா காந்தி முன்னிருந்து நடத்திய திருமணம் அது. அந்த அண்ணல் காந்தியடிகளை தலித்திய விரோதியாகச் சித்தரிக்கும் சிறுமைத்தனத்தை என்னவென்று சொல்வது?

இடைத்தரகர்கள், சுயநலவாதிகள் ஊராட்சி அமைப்புகளில் வந்துவிடக் கூடாது என்றும் சில சீர்திருத்தங்கள் செய்ய வேண்டுமென்று இந்தக் கட்டுரையாளரால் கடந்த 2005- இல் உச்சநீதிமன்றத்தில் பொதுநல வழக்கு தொடரப்பட்டது. அது குறித்த விஷயங்களில் கவனத்தைச் செலுத்துவோம் என்று உச்சநீதிமன்றத்தில் மத்திய அரசு கூறியது.

அன்றைய ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் 1835- இல் கவர்னர் ஜெனரலாக இருந்த சார்லஸ் மெட்காஃப், 'கிராம அமைப்புகள், சிறு குடியரசுகள் போலத் திகழ வேண்டும். அவை தங்களுக்கான சுய தேவைகளைப் பூர்த்தி செய்து சுதந்திரமாகச் செயல்படுவதுதான் கிராமப் பஞ்சாயத்துகள்' என்று சிலாகித்துள்ளார்.

கிராமங்களை முழு அதிகாரம் மிக்கவையாக மாற்றக் கூடியதுதான் கிராம சபைகள். அப்படிப்பட்ட கிராம சபைக்கு நேர்மையாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று சிந்திக்கிறோமா என்பதுதான் இன்றைக்குள்ள கேள்வி.

பல இடங்களில் பதவிகள் ஒட்டுமொத்தமாக ஏலத்தில் விடப்பட்டன. இந்தப் பதவிகளுக்கு ரூ.25 லட்சம், ரூ.50 லட்சம் செலவு செய்யப் பலர் தயாராக இருந்தனர். இவர்களில் பலருக்கு அடிப்படையான பொது வாழ்வு கிடையாது. அவர்களின் நோக்கம் ஒன்றுதான். அதிகமான நிதி வசதிகள் உள்ளன. பொறுப்புகளுக்கு வந்துவிட்டால் அதிக பணம் சம்பாதிக்கலாம் என்ற ஒரே நோக்கம்தான், பெரும் பணம் செலவு செய்து பதவியைப் பிடிப்பதற்கு நடந்த போட்டா போட்டி. அவர்களுக்கு கிராம சபை, மகாத்மா காந்தியின் கிராம ராஜ்யம் குறித்தெல்லாம் அக்கறையில்லை.

1980, 90- களில் மேற்கு வங்கத்திலும், கர்நாடக மாநிலத்திலும் பஞ்சாயத்து ராஜ் திறம்படச் செயல்பட்டு, பஞ்சாயத்து ராஜ் அமைப்புக்கு முன்னோடியாகத் திகழ்ந்தன. கடந்த காலத்தில் ஊராட்சித் தலைவர்களாக இருந்தவர்கள் அந்தப் பதவியை கௌரவமாகக் கருதி கடமையாற்றினர். 1960- கள் வரை போட்டி, பொறாமை இல்லாமல் ஊராட்சித் தலைவர்களாக நல்லவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

கிராமங்களில் ஊராட்சித் தலைவரும், கிராம முன்சீப்களும், கணக்குப் பிள்ளைகளும், தலையாரி, வெட்டியான் போன்றவர்கள் எல்லாம் அன்றைக்கு பொறுப்பாகக் கடமையாற்றினர்; தற்போது வசதிகள் உள்ள கிராம சபையில் அன்றைக்கு இருந்த நேர்மை, இன்றைக்கு இல்லை எனத் தெளிவாகக் கூற முடியும்.

வீடு கட்டும் திட்ட ஒப்புதல், தெரு விளக்கு பல்புகள், பிளீச்சிங் பவுடர், கொசு மருந்து போன்ற பொருள்களின் நிதிப் பரிமாற்றங்களில் வெளிப்படையாகவே தவறுகள் நடக்கின்றன. உள்ளாட்சிப் பணி ஒப்பந்ததாரர்களால் தரப்படும் கையூட்டு போன்றவற்றால் பல பணிகளும் நேர்மையாக நடப்பதில்லை என்ற குற்றச்சாட்டுக் குரல் ஆங்காங்கு உள்ளாட்சி அமைப்புகளின் கூட்டம் நடைபெறும்போது ஒலிக்கிறது.

தமிழகத்தில் 375 ஊராட்சி ஒன்றியங்களின் கீழ் 12,524 கிராம ஊராட்சிகள் இருக்கின்றன; இதில் 500 கிராம ஊராட்சிகளின் ஆண்டு வருமானம் தலா ரூ.2 கோடி ஆகும். இந்தக் கணக்குகளின் காசோலைகளில் கையெழுத்திடும் அதிகாரம் ஊராட்சித் தலைவருக்கு இருக்கிறது. இதிலும் பல தவறுகள் நிகழ்கின்றன. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் பொறுப்புக்கு வந்துவிட்டால், வல்லான் வகுத்த வழிதானே - என்ன செய்ய முடியும்?

சில பஞ்சாயத்துத் தலைவர்கள் கிராமப் பணிகளை அர்ப்பணிப்புடன் செய்வதும் உண்டு. நேர்மையானவர்களும் பொறுப்புக்கு வருகிறார்கள். ஜனநாயக மீறல்களைத் தகர்த்து இப்படிப்பட்ட நல்லவர்களும் நம்மிடம் இருக்கிறார்கள் என்ற மகிழ்ச்சியும் நமக்கு இருக்கிறது. சில பெண் பஞ்சாயத்துத் தலைவர்கள் கடமை உணர்வுடன் பஞ்சாயத்து ராஜ் சட்டத்தின் உன்னதமான நோக்கங்களை உணர்ந்து செயல்படுகின்றனர். இந்தியாவில் புள்ளிவிவரங்களின்படி 1,200 கிராமங்கள் தற்சார்போடு வெளி உதவியின்றி இன்றைக்கும் செயல்படுகின்றன.

அனைவருக்கும் வேலைவாய்ப்பு, வறுமை ஒழிப்பு போன்றவற்றை திருவள்ளூர் மாவட்டம் குத்தம்பாக்கம் கிராமம் திறம்படச் செய்துகாட்டி முன்னோடி கிராமமாகத் திகழ்கிறது. அதற்கு காரணமானவர் இளங்கோ . இதே போன்று மழைநீர் சேகரிப்பு, நீர்நிலைகள் தூர்வாருதல் போன்ற பல சாதனைகளை ராமநாதபுரம் மாவட்டம் மைக்கேல்பட்டி ஊராட்சித் தலைவர் ஜேசுமேரி புரிந்துள்ளார்.

காற்றாலைகளின் வழியே தன் மின் தேவையை கோவை மாவட்டம் ஓடந்துறை பஞ்சாயத்து பூர்த்தி செய்கிறது. இப்படியான பலர் மக்களுக்குச் செய்ய வேண்டிய தங்களின் கடமைகளை நிறைவேற்றும் ஆளுமைகளுடன் நம்மிடையே இருப்பது திருப்தியைத் தருகிறது.

ஜனநாயகத்தின் அச்சாணி கிராமத்தில் இயங்கும் பஞ்சாயத்துக் கூட்டுறவும்தான். அதற்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாமல் பாதுகாக்க வேண்டியது அனைவரின் கடமையாகும்.

சட்டத்தில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு முழுமையான அதிகாரமும், தேவையான நிதி ஆதாரங்களும், அது செயல்படத் தேவையான சுதந்திரமும் வழங்கப்பட்டாலும், அதன் இயக்கம் சிலரால் பிழைகள் ஏற்பட்டு நிரந்தரக் காட்சிப் பிழைகளாக ஆகிவிடக் கூடாது.

உள்ளாட்சியில் ஏலங்கள் நிற்கட்டும், சுயநல இருத்தல்கள் ஒழியட்டும், நியாயங்கள் தழைக்கட்டும்; கிராமங்கள் செழிக்கட்டும். மகோன்னதமான கிராம ராஜ்யத்தை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்வோம்.

**தினமணி, 10.02.2020**